
05

Regd No M. 2475.

AUG-SEP., 1931.
Vol. VI—No. 8-9.




# கிராம அபிவிருத்தி

## பாரஸ்டு பஞ்சாயத்து பத்திரிகை

ஆபீஸ் : மைலாப்பூர் : மதராஸ்.

பொருளடக்கம்.

| நெ. | | பக்கம். |
|---|---|---|
| 1. | நமது பத்திரிகை. ... ... ... | 121 |
| 2. | கிராமாபிவிருத்தி இயக்கம். ... ... ... | 122 |
| 3 | நமது தேசத்திய தொழில்கள். ... ... ... | 126 |
| 4. | ஜனத்தொகை. ... ... ... | 129 |
| 5. | அரக்கு—இந்தியாவிற்குச் சொந்தமான ஓர் சிறந்த ஏற்றுமதிப் பொருள். ... ... ... | 132 |
| 6 | [illegible]பி வளர்ப்பு—பாரெஸ்டுப் பஞ்சாயத்துகளுக்கு ஓர் சிறந்த [illegible]ில். ... ... ... | 137 |
| | [illegible]ல் ஸ்திரீகளின் கிராமாபிவிருத்தி இயக்கம். ... | 138 |

எடிடர் & மானேஜர்.
ஏ. சுவாமிநாதய்யர், பி. ஏ.

[illegible] 1931.
31-2,826
N31.6.8-9
199406

செவிட்டுத்தன்மை

மண்டை இடி, தலைவலி முதலியவை சுவஸ்தமாகும்.

## நூதனமான மேநாட்டு மருந்து

## லார்மலீன்

(ரிஜிஸ்தர் செய்யப்பட்டது)

லார்மலீன் என்னும் இம்மருந்தை வீடுகளில் வேறு அதிகப்பணச்சிலவு இல்லாமல் மிகவும் சுலபமாக உபயோகிக்கக்கூடியது, இக்களிம்பு, நோய் உள்ள இடங்களில் தடவிய மாத்திரத்தில் வலியைப் போக்கும் தன்மையுள்ளதாயிருக்கிறது

இதற்கு அநேக நற்சாக்ஷிப்பத்திரங்களும் கிடைத்திருக்கின்றன.

**நம்பிக்கையுள்ள நற்சாக்ஷிப் பத்திரம்.**

கிரைடன் நகரம், ஓபிட் ஹார்ஸ் ரோட்டிலுள்ள ஸ்ரீமதி E. குரோ எழுதுவதாவது:—"தாங்கள் எனக்கு அனுப்பிய சிறிய டின் லார்மலீன் களிம்பு என்னை என் கஷ்டத்தினின்றும் நீக்கி, என் தலைவலி, மண்டை இடி முதலியவைகளைச் சாந்தப்படுத்தி என்னைச் சந்தோஷிக்கச் செய்தது. அதிகச் சிலவு செய்தும் குணமாகாமல், கடைசியில் தங்களால் குணமடைந்ததற்கு நான் தங்களுக்கு நன்றி பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன்".

இன்றைக்கு ஒரு புட்டியை உபயோகித்துப் பாருங்கள். மூன்று ரூபாய் மணியார்டர் செய்தால் எல்லா விலாசத்திற்கும் அனுப்பப்படும்.

விலாசம்:—

ஆரல் மெடிகேஷன் பிர்க்பெக் ரோட்டு,

பக்கேன்ஹேம், இங்கிலாந்து

*Address Orders to:—*

AURAL MEDICATION, BIRKBECK ROAD,

**Beckenham, Eng.**


# ரூரல் இந்தியா


(பாரேஸ்டு பஞ்சாயத்து பத்திரிகை.)

1931

ஆனரரி எடிடர், மானேஜர்:—

எ. ஸ்வாமிநாதய்யர், B. A. ரிடயர்ட் டிப்டி கலெக்டர்

ஆபீஸ் : மைலாபூர் : மதராஸ் :

வால்யூம் VI. 1931ஞு ஆகஸ்டு மீ நெ. 8


## நமது பத்திரிகை.

இச்சஞ்சிகையிலிருந்து நமது பத்திரிகையில் கிராம பஞ்சாயத்து இயக்கத்தின் சம்பந்தமாகவும் கட்டுரைகளையும், செய்திகளையும், நிரூபங்களையும் பிரசுரிக்கப்போகிறோம். நமது மாகாணத்திலுள்ள பல பிரமுகர்கள் சில வருஷங்களாக நாம் அவைகளையும் பிரசுரிக்க வேண்டுமென்று வற்புறுத்தி வந்தார்கள். மேலும், பாரெஸ்டு பஞ்சாயத்து இயக்கமும், கிராம பஞ்சாயத்து இயக்கமும் கிராமப் பிரஜைகளின் க்ஷேமத்திற்காகவும், அபிவிருத்திக்காகவும் பாடுபடுகிற சகோதர இயக்கங்களாதலால் கிராமப் பஞ்சாயத்து விஷயங்கள் நமது பத்திரிகையில் வரையப்பட வேண்டியவைகள்தான், என்பது எல்லோருக்கும் நன்கு விளங்கும். பாரெஸ்டு பஞ்சாயத்தார்களும் அவ்வாறே தீர்மானித்தார்கள். பல கிராமப் பஞ்சாயத்தார்களும் அவ்வபிப்பிராயத்தையே சொல்லிவந்தார்கள். பத்திராதிபருக்கும் அவருடைய உதவி: ஊழியர்களுக்கும் அவ்வாறே தோன்றியது. எல்லோரும் நமது பத்திரிகையானது கிராம ஜன க்ஷேமம், அபிவிருத்தி முதலியவைகளின் நிமித்தம் மேல்மேலும் பாடுபட வேண்டுமென்று வற்புறுத்துவதால், நாம் கிராமப் பஞ்சாயத்துகளின் விஷயங்களைப் பற்றியும் வரையத்தொடங்குகிறோம். கிராமப் பஞ்சாயத்து இயக்கம் நமது தேசத்தின் ஜனத்தொகையின் அபிவிருத்திக்கு வெகு முக்கியமானதென்று அதிகமாகச் சொல்ல வேண்டியதில்லை.

நமது பத்திரிகைக்கு, கிராமப் பஞ்சாயத்தார்கள் அனைவரும் சந்தா சேர்ந்து நம்மை ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம். இன்னும், அவர்கள் பத்திரிகையில் பிரசுரிப்பதற்கு கட்டுரைகளையும், நிரூபங்களையும்,

செய்திகளையும் இடைவிடாமல் அனுப்ப வேண்டுமென்றும் கோருகிறோம். ஜில்லாக்களிலுள்ள பிரமுகர்களும், தனிகர்களும், நமது பத்திரிகைக்குச் சந்தா சேர்ந்து ஒத்தாசை செய்யும்படிக்கும் கேட்டுக்கொள்கிறோம். பஞ்சாயத்து சம்பந்தமான கவர்மெண்டு உத்திரவுகளையும் பிரகடனங்களையும் நமது பத்திரிகையில் பிரஸுரத்திற்கு அனுப்பும்படிக்கும், நமது பத்திரிகைக்கு ஆதரவை அளிக்கும்படிக்கும், நாம் கவர்மெண்டாரையும், ரிஜிஸ்டிரார் ஜனரலையும் கலெக்டர்களையும் நிரம்பவும் வணக்கமாய் கேட்டுக்கொள்கிறோம்.

## கிராமாபிவிருத்தி இயக்கம்.

சென்ற ஜூன்மாதம் 30-ம் தேதிய ஹிந்துப்பத்திரிகையில் ஸர் மோக்ஷகுண்டம் விசுவேசுவரய்யா அவர்கள் கிராமாபிவிருத்தி சம்பந்தமாக ஓர் சிறந்த கட்டுரையை யெழுதியிருக்கிறார். அதன் சாராம்சத்தைக் கூறுகிறோம்:—

கிராமாபி விருத்தி இயக்கத்திற்கு இரண்டு முக்கிய நோக்கங்களிருக்கின்றன: ஒன்று நமது தேசத்தில் வியவஸாய உற்பத்திகளும், இதர உற்பத்திகளும் அதிகரிக்கவேண்டும் என்பது, மற்றொன்று கிராம ஊழியர்கள் வேலை செய்வதில் அதிக திறமையுடன் வேலை செய்ய வேண்டு மென்பது. இந்தியாவின் ஜனத்தொகை ஏறக்குறைய 35 கோடிகளாயிருக்கின்றன. அதாவது, உலகத்தின் ஜனத்தொகையில் 5 இல் ஒரு பங்கு. இதில் 100 இல் 9 பெயர்கள் தான் படித்தவர்கள், 100 இல் 90 பெயர்கள் கிராம ஜனங்கள், 100 இல் 73 பெயர்கள் விவவஸாயிகள், தேசம் கிராம ஜனங்கள் பெருத்த தேசமாகவே இருந்து கொண்டு வருகிறது. ஜனத்தொகையில் கால்ப்பங்கு நபர்கள் வேலையில்லாமலே காலத்தைக் கழிக்கிறார்கள், மீதி $\frac{3}{4}$ பங்கு ஜனங்களுக்கும் வேண்டிய அளவில் வேலையில்லை. ஆகவே, செல்வ விருத்தி நிமித்தமாக ஜனத்தொகையின் முயர்ச்சிகள் வெகு வெகு குறைவாக விருக்கின்றன. உற்பத்திகளின் அளவும் வெகு குறைவாக விருக்கிறது ஜனத்தொகையின் சம்பாதிக்கிற சக்தியும் வெகு வெகு குறைவாகவே யிருக்கிறது. உலகத்தில் வேறெந்த தேசத்திலும், இந்தியாவில் போல், ஜனங்கள் அவ்வளவு தரித்திர நிலையில் இல்லை.

ஜப்பானில் ஒரு சிறந்த கிராமத்தின் ஒழுங்கை விவரிக்கப்போகிறேன். அவ்வொழுங்கைப் போன்ற ஒழுங்கு நம்முடை தேசத்திய கிராமங்களில் அனுஷ்டிக்கப்பட வேண்டு மென்று கோருவேன். குறிப்பிட்ட ஜப்பான் தேசத்திய கிராமத்தில் அதிலுள்ள குடும்பங்களின் தலைவர்கள் சேர்ந்த ஒரு சபை இருக்கிறது. இச்சபை வருஷத்தில் இரண்டு விசை கூடுகிறது; இக் கூட்டங்களில் கிராமத்தில் உற்பத்தி சம்பந்தமாகவும், தொழில்களின் சம்

19940



பந்தமாகவும், செலவிற்கு வேண்டிய பண சம்பந்தமாகவும் உள்ள குறைகளைப் பற்றி ஆலோசனைகள் நடத்தப்படுகின்றன. அக் குறைகளை நீக்க உபாயங்களும் தேடப்படுகின்றன. அவ்வுபாயங்களின் சம்பந்தமாகக் கைக்கொள்ளப்பட வேண்டிய காரியக்கிரம திட்டமும், செலவு திட்டமும் தீர்மானிக்கப்படுகின்றன. செலவுகளுக்கு வேண்டிய பணங்கள் சபையின் அங்கத்தினர்களிட மிருந்து வசூலிக்கப்படுகின்றன. ஒவ்வொரு குடும்பத்தின் தலைவனும் அவனவனுடைய குடும்பத்தின் வருமானத்திற் கேற்றபடி பண வீதங்களைச் செலுத்த வேண்டியிருக்கிறது சபையின் கன்பரன்சுகளில் பயிர்த்தொழிலிலிருந்தும், சகாயத் தொழில்களிலிருந்தும், தொழிற்ச்சாலைத் தொழில்களிலிருந்தும், உத்தியோக வழியிலிருந்தும் கிராமத்தின் ஜனங்களுக்கு நிறம்ப வரும்படிகள் உண்டாக வேண்டிய நிமித்தமாக பல உபாயங்கள் தேடப்படுகின்றன. கிராமாபிவிருத்தி விஷயங்களில் மிகுந்த ஞானத்தையுடைய நிபுணர்கள் தருவிக்கப்பட்டு கிராம ஜனங்களுக்கு கிராமாபிவிருத்தித் துறைகளில் உபதேசங்கள் நடத்தப்படுகின்றன. அந்நிபுணர்கள், எவ்வாறு அதிகத்தொழில்கள் உண்டாக்கப்படலா மென்பதைப் பற்றியும், உற்பத்திகள் அதிகரிக்கப்படலா மென்பதைப்பற்றியும், கிராமத்தின் ஜனங்களின் க்ஷேமம் உயர்த்தப்பட வேண்டிய வகையிலும் சிறந்த யோஜனைகளைச் சொல்கிறார்கள். மேற்கூறிய கன்பரன்சுகளோடு பொருள்க் காக்ஷிகளும், தொழில்க்காக்ஷிகளும் நடத்தப்படுகின்றன. கன்பரன்சுகளின் முடிவில் ஜனங்கள் கிராமத்தின் கோயிலுக்குப்போய்த் தாங்கள் கைக்கொண்ட தீர்மானங்கள் பரிபூர்ணமாக வேணடுமென்று கடவுளை வேண்டிக்கொள்கிறார்கள்.

மேற்கூறிய கிராம சபைக்கு நிர்வாஹ உள்ச்சபை யொன்று இருக்கிறது. அதற்கு அக்ராஸனாதிபதி தேறுதல்களால் நியமிக்கப்படுகிறார். கிராமத் தலைவர் தான் அவ்வக்ராசனாதியாகத் தேர்ந்தெடுக்கப்படுவார். கிராமப்பள்ளிக்கூட உபாத்தியாயர்தான் உதவி அக்ராஸனாதிபதியாக தேற்ந்தெடுக்கப்பட்டு நியமிக்கப்படுவார். மேற்கூறிய கன்பரன்சுகளின் தீர்மானங்களையும் காரியக்கிறம திட்டங்களையும் அமுலில் கொண்டு வருவதற்காக நிர்வாஹ உள்ச்சபை மாதம் ஒரு முறை கூடுகிறது.

1921-ம் வருஷத்திய ஸென்ஸஸின் படி இந்திய கிராமத்தின் ஜனத்தொகை சராசரியில் 418; குடும்பங்களின் சங்கியை சராசரியில் 85. இவ்வளவு சிறிய கிராமத்தில் தக்கபடி வேலை செய்ய ஆள்களும், பணமும் தேவையானபடி கிடைக்கா. ஆகவே, கிராம மொன்றுக்கு ஜனத்தொகை 500க்குக்குறையாமலிருக்க வேண்டும். இல்லாவிட்டால் சிறிய கிராமங்களை வட்டங்கள் வட்டங்களாக தொடுத்து அவ்வட்டங்களுள் உள்ள முக்கிய கிராமங்களை அவைகளுக்குத்தலைமை யிடங்களாக அமைக்கவேண்டும். இவ்வாறு வட்டங்கள் நிர்மாணிக்கப்பட்டால் வட்டங்களின் நிர்வாஹ உள் சபைகள்

பிரதி கிராமத்திற்கும் பிரதி நிதிகளை நியமித்து பெரிய சபையின் சிப்பந்திகளின் உதவியோடு வேலைகளை நடத்தும் கிராமத்தின் உற்பத்திகளையும், வரும்படிகளையும் நிர்ணயிக்கவும், அவைகளிலிருந்து அடையவேண்டிய செலவு வீதங்களை நிர்ணயிக்கவும், கிராமத்திலுள்ள வீடுகளையும் குடும்பங்களையும் ஆதாரங்களாக எடுத்துக்கொள்ளுகிறார்கள்.

ஒரு குடியானவனுடைய குடும்பத்தின் வரும்படியானது அக்குடும்பத்தைச் சேர்ந்த நபர்கள் நடத்தும் பற்பல வேலைகளைப் பொருத்திருக்கிறது. வியவசாய உற்பத்தி, சகாயத்தொழில்களின் உற்பத்திகள், கூலிவேலையிலிருந்தும் உத்தியோகங்களிலிருந்தும் வரும் சம்பளங்கள் அவ்வரும்படியின் பாகங்கள். குடும்பங்கள் ஒரு வரும்படி ரிஜிஸ்டரை வைத்துவர வேண்டும். மேற்கூறியவகைகளொவ்வொன்றிலும், பிரதி வருஷமும் வருகிற வரும்படி விவரங்கள் அதில் வரையப்பட வேண்டும். கிராமத்தில் ஒரு பிராக்ரெஸ் (progress) ரிஜிஸ்டர் வைக்கப்பட்டு, அதில் மேற்கூறிய புள்ளிகள் வருஷந்தோறும் எழுதப்பட்டு வரவேண்டும். ஜப்பான் தேசத்தியக் கிராமங்களில் கல்வி அபிவிருத்தி முயர்ச்சிகளைப்பற்றிய விவரங்கள்கூட மேற்கூறிய ரிஜிஸ்டர்களில் வரையப்படுகின்றனவாம். இவ்விவரங்களடங்கிய ஒருப்பிரகடனம் கிராம கச்சேரியில் நோட்டீஸ் போர்டில் ஒட்டப்படுகிறதாம். இவ்விதப் பிரகடனங்களை கிராம ஜனங்கள் கவனித்துப் பார்க்கிறார்கள். அவர்கள் அப்பொழுது தங்களுடைய நிலைகளை அறிந்து கொண்டு முன்னேற்ற வழியைத் தேடுகிறார்கள். அதிக உற்பத்திகளை விளைக்கவும், அதிக வரும்படிகளை யடையவும் புதிய வழிகளைத் தேடுகிறார்கள். செலவுகளையும் சிக்கணமாகச் செய்ய முயலுகிறார்கள்.

வியவசாய உற்பத்திகளை யதிகரிப்பதற்கு பயிர் நில விஸ்தீர்ணம் அதிகமாக வேண்டும்; அல்லது ஏறி, கால்வாய், கிணறு முதலியவைகளின் பாசனங்கள் அதிகப்படுத்தப்பட வேண்டும்; அல்லது சிறிய வயல்கள் கூட்டப்பட்டு பெரிய வயல்களாக்கப்பட வேண்டும்; அல்லது, இலாபகரமான பயிர்களை அனுஷ்டிப்பதற்குப் பண உதவி சௌகரியங்கள் அதிகமாக ஏற்படவேண்டும்; அல்லது நல்ல விரைகளும், உயர்வான எருக்களும் உபயோகிக்கப்படவேண்டும். பயிர் நஷ்டங்களை உண்டாக்கும் பூச்சிகளும் அழிக்கப்பட வேண்டும்; நவீன சாஸ்திர ஆராய்ச்சி ஞானம் உபயோகிக்கப்பட வேண்டும்; கூட்டுறவு, வியவஸாயமுயர்ச்சிகளெல்லாம் அநுஷ்டிக்கப்பட வேண்டும். இன்னும், சகாயத்தொழில்களாகிய நூற்பு, நெசவு, பட்டு நூற்பு, தச்சு வேலை, கருமார வேலை, சக்கிலி வேலை, குயவன் வேலை, செங்கல்ச்சூளை வேலை, ஜமக்காள நெசவு, கூடை பின்னல், கயிறு பின்னல், ஆடு மாடு ஜீவனம் முதலிய தொழில்களும் அநுஷ்டிக்கப்பட வேண்டும். கூலி, சம்பள ஜீவன வகையில், இயந்தி



ரங்களையும் கருவிகளையும் வைத்துக்கொண்டு குடிக்கூலிக்கு விடுதல், கூலிக்கு வண்டி ஓட்டுதல், எருக்களைச் சேர்த்துக் கொண்டுபோய் விற்றல் முதலிய இதர தொழில்களும் அநுஷ்டிக்கப்பட வேண்டும்.

கிராம ஜனங்களுக்கு வேலைத்திறமையையும் முயற்சியையும் நிறம்ப உண்டாக்கக்கூடியது, படிக்கவும், எழுதவும், எண் கூட்டவும் கற்பிக்கக்கூடிய கல்விதான். அவர்களுக்கு ஒழுங்காய் வேலை செய்ய வேண்டிய வகையிலும், சோம்பலில்லாமல் வேலை செய்ய வேண்டிய வகையிலும், இலாபருசி வகையிலும் போதனைகள் நடத்தப்பட வேண்டும். ஒவ்வொரு குடும்பத்திய ஒவ்வொரு வயதுவந்த நபரும் தினம் ஒன்றுக்கு 8 மணி நேரத்திற்குக் குறையாமல் வேலை செய்ய வேண்டும். இவ்விதமாக வாரத்திற்கு 6 நாள் வேலை செய்ய வேண்டும். அவர்களுக்கு பணத்தைச் சேமிக்கிற மனப்பாங்கு உண்டாக்கப்பட வேண்டும். கவர்மெண்டாரும், கிராமங்களில் குடும்பங்களின் தலைவர்களும்தான் கிராம ஜனங்களின் கல்வியின் நிமித்தம் பொருப்பாளிகளாவார்கள். கிராம சபையானது கிராமத்திலுள்ள குடும்பத் தலைவர்கள் மேற்கூறியபடி பொறுப்பை வஹிக்க வேண்டிய நிமித்தம் கிராமத்தில் இடைவிடாமல் பிரசாரத்தைச் செய்துவர வேண்டும். குடும்பத் தலைவர்கள், அவரவர் குடும்பத்தின் நபர்கள் கட்டுபட்டு, தேக புஷ்டியையும் கல்வியையும் அடைந்து நல்லொழுக்கத்தை வஹித்து, சுய முயர்ச்சியையும் சுய பலத்தையும் பாராட்டி வரும்படி முயர்ச்சிகளை அநுஷ்டித்து வரவேண்டும். கிராம ஜனங்கள் ஒருவருக்கொருவர் நிஷ்கபடமாக சகோதர உணர்ச்சியுடன் நடந்து கொண்டு கூட்டு முயர்ச்சிகளைச் செய்து கொண்டும், ஒருவருக்கொருவர் அறுவடை காலத்திலும், மற்ற நெருக்கடியான் காலங்களிலும் ஒத்தாசை செய்து கொண்டுமிருக்க வேண்டிய நிமித்தமாய் போதனைகளும் பிரசாரங்களும் நடத்தப்பட வேண்டும்.

அநேக குடும்பங்களில் சிலர் ஒரு வேலைக்கும் உதவாமல் காலம் கழிக்கிறார்களாதலால் அவர்களையெல்லாம் ஏதாவது வரும்படி வரக்கூடிய தொழில்களில் பயிர்ச்சி செய்து சம்பாதிக்கும்படிச் செய்ய வேண்டும்.

பிரமுகர்கள் கிராமாபிவிருத்தி முயர்ச்சிகளில் வேலை செய்யத் தொடங்க வேண்டும். கிராம சபைகளை அவர்கள் நிர்மாணஞ் செய்ய வேண்டும். அச்சபைகள் வேலைசெய்ய வேண்டிய வகையில் விதிகளையும் காரியக்கிரம திட்டங்களையும் அவர்கள் ஏற்படுத்த வேண்டும். இச்சபைகளின் வேலைகளை அவர்கள் அடிக்கடி கவனித்து வரவேண்டும். கிராம ஜனங்களுக்கு ருசியும் உற்சாகமும் ஏற்படுகிற வரையில் அவர்கள் மேற்கூறியவாறே பாடுபட வேண்டும். ஒவ்வொரு வட்டத்திற்கும் ஒரு தலைவர் வேலை செய்ய வேண்டும். நமது கல்லூரியிலிருந்து வெளிக்கிளம்பிய பல திறமையுள்ள வாலிபர்கள்

இவ்வித தேச சேவையைப் பாராட்டுவோர்களாகையால், அவர்களை கிராமங்களில் இவ்வித முயற்சிகளுக்கு நியமிக்கக்கூடும். அவர்களுக்கு செலவுக்காக ஒரு சுவல்ப தொகையைக் கொடுத்தால் போதும்.

இன்னும், கிராமங்களில் இராப்பள்ளிக்கூடங்களும், பத்திரிகை வாசகசாலைகளும் நடத்தப்படலாம்.

நமது தேசம் சுய இராஜ்ஜியத்தை யடையுமாகில், கிராமங்களில் சுய ஆட்சி ஏற்பட வேண்டும். அப்பொழுதுதான் கிராம ஜனங்கள் சுய முயற்சியை அநுஷ்டிப்பார்கள், அபிவிருத்தி முயற்சிகள் நன்றாய் நடைபெறும்.

# நமது தேசத்திய தொழில்கள்.

ஜூன் மாதக்கோடியில் கல்கத்தா ரோடரி கிளப்பின் முன்பாக வெங்காள மாஹாண இந்திய வியாபாரச்சங்கத்தின் காரியதரிசியாகிய ஸ்ரீமான் எம். பி. காந்தி அவர்கள் செய்த உபந்நியாஸத்தின் சுருக்கம்:—

உலகத்தின் வியாபாரச் சுணக்கம் நமது தேசத்தை நிரம்பத்தாக்கியிருக்கிறது. எல்லா தேசங்களுமே இச்சுணக்கத்தால் தாக்கப்பட்டிருந்த போதிலும், வியவஸாயத்தையே ஆதாரமாக வைத்துக்கொண்டிருக்கிற நமது தேசம் போன்ற தேசங்களின் செல்வநிலை அதிகமாகத் தாக்கப்பட்டிருக்கிறது. விலைவாசிகள் வியவஸாய உற்பத்திகளின் சம்பந்தமாக அதிகமாகக் குறைந்திருக்கின்றன, தொழிலுற்பத்திகளின் விலைகள் அவ்வளவு தூரம் குறையவில்லை.

இந்தியாவானது, தான் இவ்வித நிலையிலிருந்து கிளம்புவதற்கு என்ன செய்யவேண்டும்? அதன் ஜனத்தொகையில் 27 கோடி நபர்கள் வியவஸாயத்தையே ஜீவனமாகக் கொண்டிருக்கிறார்கள். மேலும், சென்ற பத்து வருஷங்களில் ஜனத்தொகையில் இன்னும் 3 கோடிகள் ஏற்பட்டுவிட்டன. இந்த அதிக ஜனத்தொகையும் பயிர்த்தொழிலையே தான் அநுசரிக்கிறது. கிராமத் தொழில்கள் அழிந்துபோய் விட்டபடியால் எல்லோரும் பயிர்த்தொழிலையே அநுசரிக்கவேண்டியதாக விருக்கிறது. ஹிந்து தர்ம சாஸ்திரம், பாக விஷயமாக அநுஷ்டிக்கப்படுவதில் நிலங்கள் துண்டு துண்டுகளாகப் பிறிக்கப்படுகின்றன. இக்காரணத்தினால்தான் சிறிய துண்டு நிலங்கள் அதிகரித்துவிட்டன. அவைகள் பயிர்முயற்சிகளுக்கு ஏற்றபடி பயன்களைக் கொடுக்கிறதில்லை. உற்பத்திகள் வெகு குறைவாக ஏற்படுகின்றன. ஆகவே, ஜனத்தொகையில் பெரும்பாலர்களுக்கு யோக க்ஷேமத்துக்கு வேண்டிய அளவில் வருமானம் உண்டாகிறதில்லை. இக்காரணத்தினால் தான் நாம் நம்முடைய அதிகரிக்கும் ஜனத்தொகைக்குப் பயிர்த்தொழிலைத் தவிர வேறு ஜீவனோபாயங்களைக் தேடவேண்டியது வெகு அவசியமாக



விருக்கிறது. நமது தேசத்தில் 100 இல் 73 பெயர்கள் வியவஸாயத்தையே ஜீவனமாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள், 18 பெயர்கள்தான் தொழில்களிலும் வியாபாரங்களிலும் அமைந்திருக்கிறார்கள்; இங்கிலாந்திலோ 100இல் 8 பெயர்கள் தான் வியவஸாயத்தை அநுஷ்டிக்கிறார்கள். 71 பெயர்கள் தொழில்களிலும், வியாபாரங்களிலும் அமைந்திருக்கிறார்கள்; அமெரிகா ஐக்கிய நாடுகளில் 100இல் 32 பெயர்கள் வியவஸாயத்தை அநுஷ்டிக்கிறார்கள். 50 பெயர்கள் தொழில்களிலும், வியாபாரங்களிலும் அமைந்திருக்கிறார்கள்; ஜெர்மெனியில் 100இல் 34 பெயர்கள் வியவஸாயத்தை அநுஷ்டிக்கிறார்கள். 51 பெயர்கள் தொழில்களிலும் வியாபாரங்களிலும் அமைந்திருர்கிறார்கள்; பிரான்சில் 100இல் 40 பெயர்கள் வியவஸாயத்தை அநுஷ்டிக்கிறார்கள், 45 பெயர்கள் தொழில்களிலும் வியாபாரங்களிலும் அமைந்திருக்கிறார்கள், வியவஸாயத்தை வெகு வெகு பெயர்கள் நம்முடைய தேசத்தில் ஜீவனமாகக் கொண்டிருப்பது தான் நம்முடைய தேசத்தில் வியவஸாயம் முன்னேற்றமடையாமலிருப்பதற்குக் காரணம். மேலும், தொழில்கள் பிறபலமாக அநுஷ்டிக்கப்பட்டால் தான் தற்போதில் சிறிய விஸ்தீர்ணங்களைப்பயிரிட்டுக் குறைவான வரும்படிகளை அடையும் நபர்களுக்குத் தக்க வரும்படிகள் வரக்கூடிய ஜீவன மார்க்கங்கள் ஏற்படக்கூடும்.

பெரிய தொழில்கள் உண்டாக்கப்பட்டால் தான் பயிரையே நம்பியிருக்கும் பல சில்லரை ஊழியர்களுக்கு ஜீவனமுண்டாகும். கிராம ஜனங்களுள் அநேகருக்கு வருஷத்தில் 6 மாதங்களுக்கு வேலையில்லை; அவர்களின் தரித்திர நிலை பட்டணவாசிகளுக்குத் தெரியாது. ஆகவே, அவர்கள் அக்காலத்தில் அநுஷ்டிக்கும் படியாக சில்லரைத் தொழில்களும், பெரிய தொழில்களும் உண்டாக்கப்பட்டாலொழிய அவர்களுக்குத் தக்க வரும்படிகள் கிடைக்கா.

தற்கால நிலை நமது தேசத்தில் தொழில்களையுண்டாக்கி அபிவிருத்தி செய்வதற்குச் சரியானதா? உலகத்தில் அதிக உற்பத்திகள் தொழில்களில் உண்டாகிவிட்டபடியால் பொருள்களின் விலைகள் இறங்கிவிட்டன வென்று கூக்குறலிடுகிறார்களே. நமது தேசத்தில் தொழில் ஸ்தாபனங்கள் அதிகரிக்கப்பட வேண்டுமோ? இக்கேள்விகளுக்குப் பதிலானது, மற்ற தொழில் தேசங்களின் நிலைகளை உத்தேசித்து நாம் நம்முடைய தேசத்தை தொழில் தேசமாகச் செய்வது உசிதமல்ல வென்று இருக்குமாகில், நம்முடைய தேசம் என்றைக்குமே தொழில் முயற்சிகளை உடைத்தாயில்லாத தேசமாகவே தான் இருக்க வேண்டும்.

இது வரையிலும் தொழில்களை அபிவிருத்தி செய்ய, கவர்மெண்டார் சரியாக முயற்சிசெய்யவேயில்லை. இப்பொழுது அவர்கள் தக்க முயற்சிகளைக் கைக்கொள்ள வேண்டுமென்பதை நன்றாய் உணர்கிறார்கள். ஆகவே, அவர்கள் தாமதமில்லாமல் அவைகளைக் கைக்கொள்ளவேண்டும். இந்தியா

வானது தொழில்களை யநுஷ்டிக்கிற தேசங்களுள் முக்கியமானதாக ஆவதினால் அதன் முயர்ச்சிகள் இதரதேசங்களின் முயர்ச்சிகளுக்கு இடையூறுகளாக அமையா. ஏனென்றால் தொழில் முயர்ச்சிகள் இந்தியாவில் அதிகரித்தால் இந்தியாவில் செல்வம் அதிகரிக்கும், இந்திய ஜனங்கள் வாழ்வில் உயர்வான சௌகரியங்களை வேண்டுவார்கள். பணமதிகரிக்குமாதலால் இந்திய ஜனங்கள் பல நாகரீக வாழ்க்கைகளையநுஸரிக்கத் தொடங்குவார்கள்.

இப்பொழுது நாம் அநேக வியவஸாயச் சரக்குகளை அந்நிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறோம். அந்நாடுகளிலிருந்து தொழிலுற்பத்திகளை நாம் இறக்குமதி செய்கிறோம். நம்முடைய தேசத்தில் வியவஸாய உற்பத்திகளும், உலோக உற்பத்திகளும் ஏராளமாக விருக்கின்றன. மின்சார சக்தி சௌகரியமும், பொருள்களை ஒரு ஊரிலிருந்து இன்னொரு ஊருக்கு அநுப்புவதற்கு ரோட்டு, ரெயில் முதலிய சௌகரியங்களும் குறைவில்லாமல் இருக்கின்றன. நம்முடைய தேசத்திலேயே நம்முடைய பொருள் உற்பத்திகளுக்குப்போதுமான வியாபார மிருக்கிறது. ஆகவே, நாம் நமது வியவஸாய சரக்குகளையும் உலோக உற்பத்திகளையும் தற்போதிய அளவில் அந்நிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவும் வேண்டி யிராது: அந்நிய நாட்டுத்தொழில் உற்பத்திகளை தற்போதிய அளவில் இறக்குமதி செய்யவும் வேண்டி யிராது. உப்பை நாமே உற்பத்தி செய்யக்கூடாதா? உடைகளை நாமே நெய்யக்கூடாதா? சர்க்கரையையும், கண்ணாடியையும், கண்ணாடி சாமான்களையும் எண்ணைகளையும், ஆணிகளையும், இரும்பு சாமான்களையும் மின்சார சாமான்களையும், இயந்திரங்களையும் நாமே ஏன் உற்பத்தி செய்யக்கூடாது? நாம் தோல்களை நம்முடைய தேசத்திலேயே ஏன் பதம் பண்ணிக்கக்கூடாது? இன்னும், காகிதம், மட்கலங்கள் சாயங்கள், சோப்புகள், பூட்ஸுகள் முதலியவற்றை நாமே ஏன் தயாரித்துக் கொள்ளக்கூடாது? சென்ற வருஷத்தில் நாம் 88 இலக்ஷ ரூபாய்கள் பெறுமான பூட்சுகளையும் ஜோடுகளையும் அந்நிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்திருக்கிறோமே. இரண்டு வருஷங்களுக்கு முன்னே 3 இலக்ஷ ரூபாய் பெறுமான இச்சரக்குகளை அநுப்பிய ஜபான் சென்ற வருஷத்தில் 67 இலக்ஷ ரூபாய் பெறுமான சரக்குகளை அநுப்பியது.

நமக்குப் போதுமான சௌகரியங்கள் அமையுமாகில் நாம் தொழில்களைக் கைப்பற்றி அவைகளை வெகு சீக்கிரத்தில் நிறம்ப அபிவிருத்தி செய்துவிடக்கூடும். கவர்மெண்டார் தொழிலபிவிருத்தி நிமித்தமாக தக்க சஹாயங்களைச் செய்தால் மூலதனக்காரர்கள் மூலதனங்களைக் கொடுக்கக் கட்டாயம் முன் வருவார்கள்.

பண ஒத்தாசைகளைச் செய்யக்கூடிய பாங்கிகளும் ஏற்படவேண்டும். தொழில் ஸதாபனங்களுக்குப் பண உதவியைச் செய்யக்கூடிய பாங்கிகளை



இப்போது இல்லை. இம்பீரியல் பாங்கி ஆப் இந்தியாவானது 6 மாத கெடுவுக்கு மேல் கடன்களைக் கொடுக்கிறதில்லை. அந்நிய நாட்டு வியாபாரங்களுக்கு எக்சேஞ்சு பாங்கிகள் சகாயம் செய்கின்றன.

ஆரம்பக்கல்வி, மத்தியதரக்கல்வி, பௌதிக, இரஸாயன சாஸ்திர ஆராய்ச்சிகள், முதலியவைகளை அதிக அளவில் பரவச்செய்ய வேண்டும். தொழில்கள் நன்றாய் நடக்க வேண்டியதற்காக கவர்மெண்டார் ஆராய்ச்சி ஸ்தாபனங்களை ஏற்படுத்தி அவைகளை நடத்துவதற்கு நிபுணர்களைத் தருவிக்கவேண்டும்.

தொழிலிலாகாவிற்குக் கவர்மெண்டார் வேண்டிய பணத்தைக் கொடுக்காமலிருந்தபடியால் கிராமத்தொழில்கள் அபிவிருத்தியை யடையாமலிருக்கின்றன. கவர்மெண்டாருக்கு திட்டங்களில் சேமிக்கப்படும் நிதிகள் தொழிலபிவிருத்தி முயற்சிகளுக்கு உபயோகப்படும்படியாகவும் ஒரு சட்டம் ஏற்படவேண்டும்.

# ஜனத்தொகை.

## 1. பொது

இந்தியாவின் ஜனத்தொகை, 1931-ம் ௵த்தின் ஸென்ஸஸின்படி, 356 மிலியன்கள். அதாவது, 1921-ம் ௵த்திய சங்கியைக்கு மேல் 36 மிலியன்கள். வியவஸாய முயர்ச்சிகளில் அமைந்திருப்பவர்களின் சங்கியைதான் பெருகியிருக்கிறது. ஜனங்கள் கிராமங்களிலிருந்து பட்டணங்களுக்கு வாஸமாகச் செல்கிறார்களென்று சொல்வது பிசகு. நமது 30, 40 பெரிய பட்டணங்களிலும் 100க்கு 10க்குமேல் ஜனத்தொகை அதிகப்படவில்லை. ஜனத்தொகை 5000 த்திற்குள்ளேயே யிருக்கப்பட்ட கிராமங்களின் சங்கியைகளில் 40 வருஷங்களாக மாறுதலே கிடையாது. அவைகளின் மொத்த சக்கியை தேசத்தின் சங்கியையில் 100க்கு 90 ஆகவே இருந்து வருகிறது. இனிமேலும், அதே விதமாகவேத்தான் இருக்கும் போலுமிருக்கிறது. பெரிய நகரங்களை ஜனங்கள் நிரந்தரவாஸ ஸ்தலங்களாகக் கருதுகிறதில்லை. பிழைப்புக்காக மாத்திரம் தான் அவைகள் வாஸ்ஸ்தலங்களாக கருதப்படுகின்றன. 1921-ம் ௵த்திய ஸென்ஸஸின்படி பொம்பாயின் ஜனத்தொகையில் 6இல் ஒருவன் தான் பொம்பாயில் பிறந்தவனும். இந்தியாவில் வியவஸாயிகளின் சங்கியை பிரதி வருஷமும் 3 மிலியன்கள் வீதம் அதிகப்பட்டுக் கொண்டு வருகிறது. இவ்விதமாகவே அச்சங்கியை இன்னும் 20 வருஷங்கள் வரையில் அதிகப்படும் பக்ஷத்தில் மொத்த அதிக சங்கியை ஜெர்மெனியின் ஜனத்தொகை சங்கியைக்குச்சரியாய் ஆகிவிடும்.

## 2. பிரஜோத்பத்தி.

ஜனத்தொகையைக் குறைக்கும் சம்பவங்கள், முன்னே யெல்லாம், பஞ்சங்களும், கொள்ளை நோய்களாகவுமிருந்தன. தற்காலத்தில் பிரயாண வசதிகளதிகரித்திருக்கிறபடியால், உணவுகள் ஒருப்பிறதேசத்திலிருந்து இன்னொரு பிறதேசத்திற்கு எளிதல் கொண்டு போகப்படுகின்றன. ஆதலால், பஞ்சக் கொடுமையால் மரணங்கள் தற்காலத்தில் ஏற்படுகிறதில்லை. கொள்ளை நோய்களினால் உண்டாகும் மரணங்களும், ஜனத்தொகையை அதிகமாகக் குறைக்கக்கூடிய அளவில் ஏற்படுகிறதில்லை. மேனாட்டு நாகரீகத்தைப் பின்பற்றும் சில இந்தியர்கள் தங்களுடைய பெண்களின் விவகாரங்களை அவர்களுக்கு வயதுவந்த பின்பு செய்துவருவதன் பயனாகவும், கர்ப்பத்தடை முயர்ச்சிகள் சில நபர்களால் அநுஷ்டிக்கப்படுவதன் பயனாகவும், யோக க்ஷேமத்தின் சிலவுகள் அதிகமாகுமென்கிற பயத்தினால் சிலர் கல்யாணங்களை காலங்கழித்துச் செய்து கொள்வதின் பயனாகவும் ஜனத்தொகையிலும் பிரஜோத்பத்தியிலும் ஏற்ற வித்தியாஸங்கள் ஏற்படுகிறதேயில்லை. சிசு மரணங்களும் குறைந்து வருகின்றன. ஆகையால் ஜனத்தொகையில் குறைவு ஏற்படாது.

## 3. ஜீவனங்கள்.

மேற்கூறியவாறு அதிகமாகிவரும் ஜனத்தொகைக்கு ஜீவனங்களை எங்கே கண்டுபிடிக்கக்கூடும். அயல் நாடுகள் இப்போது நமது நாட்டினரை வேலைகளுக்கு வேண்டுவதில்லை. மலேயாவிலும், ஸிலோனிலும் மாத்திரமே சில இந்தியர்கள் இன்னுமிருந்துவருகிறார்கள். கிழக்கு ஆப்ரிகாவிலும், தென் ஆப்ரிகாவிலும் கூட இந்திய வியாபாரிகளின் சங்கியை அதிகமாகும் போல் காணப்படவில்லை. நம்முடைய தேசத்திய வியவஸாய பூமிகள் இன்னும் எத்தனை பெயர்களை, எவ்வளவு மட்டும் போஷிக்கக்கூடும்? சில்லரைத் தொழில்களும் அந்நிய தேச தொழிற்சாலைகளின் போட்டிகளால் அழிந்து போகின்றனவே. சென்ற 50 வருஷங்களில் ஜனத்தொகைக்கு 85 மிலியன்கள் சேர்ந்திருக்கின்றனவே. இன்னமும், பிரதி வருஷமும் 3 மிலியன்கள் சேரப்போகின்றனவே. நம்முடைய தேசத்திய பயிர் பூமிகளின் மொத்த விஸ்தீர்ணம் 300 மிலியன் ஏகர்கள். அடுத்த 15 வருஷங்களுள் இன்னும் ஸிந்து மாஹாணத்திலும், பஞ்சாபிலும், மற்றப் பிரதேசங்களிலும் நடைபெறும் புதிய ஜலாசய நிர்மாண வேலைகளினால் இன்னொரு 20, 30 மிலியன் ஏகர்கள் சேர்க்கப்படக்கூடும். ஆகவே, நாம் நம்முடைய தேசத்தில் பயிர் பூமிகளின் மொத்த விஸ்தீர்ணத்தை 330 ஏகர்களென்றே வைத்துக்கொள்ளலாம். பிரிடிஷ் இராஜாங்கம் நம்முடைய பிரதேசத்தில் முதல் முதலில் ஏற்பட்ட பொழுது நம்முடைய ஜனத்தொகையில் ஒவ்வொரு புருஷன், பெண்சாதி, பிள்ளை வேலை செய்து பிழைப்பதற்குச் சராசரியில் 2 ஏகரா நிலமிருந்தது.



பின்பு 50 வருஷங்களுக்கு முன்னே அவ்விஸ்தீர்ணம் ஒரு ஏகராவாகக் குறைந்தது. இனி, அது முக்கால் அல்லது அரை ஏகராவாகவும் குறைந்துவிடும் போல்காண்கிறது.

நம்முடைய தலைவர்கள், அடிக்கடி, அதிக வரும்படிகளை உண்டுபண்ணும்படியாக நிலங்கள் ஓயாமல் சாகுபடி செய்யப்படவேண்டுமென்று கூறி வருகிறார்கள். அவ்வாறு முயர்ச்சிகள் அநுஷ்டிக்கப்பட்டால் ஜனத்தொகைக்குப் போதுமான உணவு விளையும் என்பது அவர்களின் நோக்கம். நிலத்தையே இத்தனை நபர்களும் வரும்படியின் நிமித்தம் நம்பியிருக்கக்கூடாது. உற்பத்திகளில் சிறிது பாகத்தை விற்றுப் பணமாக்கி யோகக்ஷேம சிலவுகள் நடத்தப்பட வேண்டியிருக்கின்றன. மேனாடுகளில் சிறிய குடியானவர்கள் நிலங்களில் வியவஸாயத்தோடு பசுக்களை வைத்துக்கொண்டும், கோழி வளர்ப்பை அநுசரித்துக் கொண்டும், பன்றிகளை வைத்துக்கொண்டும், காய்கறிகளையும், பழவகைகளையும் விளைத்துக் கொண்டும் பணங்களை அடைகிறார்களேயொழிய அவர்கள் தானியஉற்பத்திகளை விற்றுப்பணங்களை அடைகிறதில்லை. இந்தியாவிலோ இவ்வழக்கம் அநுஸரிக்கப்படுகிறதில்லை. சிறிய குடியானவர்கள் நெல்லையும் இதர தானியங்களையும் விற்றுத்தான் பணங்களை அடைகிறார்கள். அவர்கள் தங்களுடைய யோக க்ஷேமங்களுக்கு சௌகரியங்களைக் கொடுக்கக்கூடிய அளவில் மாத்திரம் மாடுகளை வைத்து ஸம்ரக்ஷிக்கிறார்கள்; அல்லது அவர்களுடைய கிராமங்களுக்கு மாத்திரமே நெய்யையும் பாலையும் உற்பத்தி செய்யக்கூடிய அளவில் மாத்திரம் அவைகளை வைத்து வளர்க்கிறார்கள். தற்காலத்தில் வியவஸாயத்தில் மனித ஊழியத்தைக் குறைக்கக்கூடிய இயந்திரங்களை உபயோகிக்கும்படி மேனாட்டு நிபுணர்கள் கூறிவருகிறார்கள். ஏற்கனவே, நமது கிராம ஜனங்களுக்கு பயிர்வேலை வருஷத்தில் 7, 8 மாதங்களுக்குத்தான் இருக்கிறது. மேற்கூறிய யோஜனை கைக்கொள்ளப்பட்டால் ஜனத்தொகையின் ஜீவனோபாயக் கஷ்டம் அதிகரிக்கும். ஆகவே, கிராம முயர்ச்சிகள், புதிய, சிறந்த, அதிகசெல்வ உற்பத்தி வழிகளில் அமைக்கப்பட வேண்டும். கிராம ஜனங்கள் மேனாட்டு கிராம ஜனங்களைப்போல் இதர சகாய தொழில் முயற்சிகளை அநுஷ்டிக்க வேண்டும். கவர்மெண்டாரும் அவர்களின் உற்பத்திகள் நன்றாய் விலையாகி வரும்படிகளை உண்டுபண்ணும் பொருட்டு 'மார்கெட்டிங்கு' (Marketing) விஷயமாய் தக்க முயர்ச்சிகளைக் கைக்கொள்ள வேண்டும்.

## 4. பெரிய தொழில்களும், தொழிற்சாலைத் தொழில்களும்.

மேனாடுகளில் செல்வம் அதிகரித்திருப்பதற்குக் காரணம் அவைகள் பெரிய தொழில்களை அநுஸரிப்பதும், வியவஸாயிகள் குறைவாகவும், தொழிலாளிகள் அதிகமாகவுமிருப்பதும்தான். நம்முடைய தேசத்தில் ஜனத்தொகை

யில் 100 இல் 73 பெயர்கள் வியவஸாயிகளாகவும் 18 பெயர்கள் தொழிலாளிகளாகவும் இருக்கையில், இங்கிலாந்தில் 100 இல் 8 பெயர்கள்தான் வியவஸாயிகளாகவும் 71 பெயர்கள் தொழிலாளிகளாகவும் இருக்கிறார்கள். நம்முடைய தேசத்திய ஜனங்கள் ஜீவனத்திற்கும் உணவுக்கும் திண்டாடுகையில் நாம் நம்முடைய வியவஸாய, உலோகச் சரக்குகளையெல்லாம் அந்நிய நாடுகளுக்கு அநுப்பி, அவைகளிலிருந்து தொழிலுற்பத்திகளைப் பெறுகிறோம். ஆகவே, நம்முடைய ஜனத்தொகையைப் பட்டினியாகக் கிடக்கும்படிச் செய்து அந்நிய நாட்டினர்களுக்கு ஜீவனோபாயங்களையும் செல்வத்தையும் உண்டாக்குகிறோம். ஆகையால், தேச பக்தியுள்ள தலைவர்கள் நம்முடைய தேசத்திலேயே பல தொழில்களையும் பிறப்பித்து ஜனத்தொகைக்கு ஜீவனங்களையும் செல்வத்தையும் உண்டுபண்ண வேண்டுமென்று கோறுவோம்.

# அரக்கு—இந்தியாவிற்குச் சொந்தமான ஓர் சிறந்த ஏற்றுமதிப் பொருள்.

### பஞ்சாயத்துக் காடுகளில் அநுஷ்டிக்கக் கூடிய தொழில்.

இராயல் ஸொஸைடி ஆப் ஆர்டஸீ என்னும் சங்கத்தின் முன்பாக ஸர் தாமஸ் ஹாலண்டு என்பவர் இந்தியாவின் அரக்கு உற்பத்தித்தொழிலைப்பற்றி ஓர் சிறந்த உபந்நியாஸத்தைச் செய்தார். அவ்வுபந்நியாஸத்தின் சம்பந்தமாக லண்டனில் பிரசுரமாகும் 'இந்தியன் அண்டு ஈஸ்டர்ன் டிரக்கிஸ்டு' பத்திரிகை வரைகிறது:—

ஒரு வித இயற்கைப்பொருள் ஒரு தேசத்திலேயே உண்டாகி, உண்டாகிற பொருளின் முழு அளவும் வேறொரு தேசத்திலேயே உபயோகிக்கப் படுகிறதற்கு உதாரணம் அரக்குப் பூச்சியால் உண்டாக்கப்படும் ஷெல்லாக் கென்கிற பிசின். அந்நிய நாடுகளுக்கு ஏற்றுமதிக்காக இந்தியாவில் தவிர வேறொரு தேசத்திலும் இப் பிசின் உண்டாக்கப்படுகிறதில்லை. சில வருஷங்களுக்கு முன் ஷெல்லாக்குக்கு அந்நிய நாடுகளிலிருந்து அதிக விலை ஏற்பட்டது; அது காரணம் பற்றி, இந்தியா கவர்மெண்டார் இப்பொருளுக்கு அதிக ஏற்றுமதி வரியை விதித்தார்கள். அப்பொழுது தான், இந்தோ சீனாவும், தானும் இப்பொருளை யுற்பத்தி செய்கிற தேச மென்பதை வெளியிட்டது. அநேக தேசங்கள் அரக்கை வேண்டின போதிலும், உலகத்தில் உண்டாக்கப் பட்ட அரக்கின் அளவில் ஏறக்குறைய முக்கால்ப் பங்கை அமெரிக ஐக்கிய நாடுகள் வேண்டுகின்றன. ஆகவே, ஷெல்லாக்கானது உலகத்தில் பலதேசங்களுக்குத் தேவையாயிருக்கிற ஓர் சிறந்த வியாபாரப்பொருள். ஷெல்லாக்குப் பதிலாக இதர வஸ்துக்கள் உபயோகிக்கப்படக் கூடுமாயினும், அதன் குணங்களை யெல்லாம் உடைத்தான இதரப் பொருள்கள் ஷெல்லாக்கைப்போல்



குறைந்த விலைக்கு அகப்படமாட்டா. இது வரையில் ஷெல்லாக்கானது கிராம போன் ரிகார்டுகள் தயாரிப்பதில் உபயோகிக்கப்பட்டு வந்தது. கிராம போன் ரிகார்டுத்தொழிலுக்கே எப்போதைக்கும் அது வேண்டியிருக்குமாகில் அதன் உற்பத்திக் குறைவினால் உலகத்துக்கு யாதொரு கஷ்டமும் உண்டாகாது. ஆனால், அது தற்போதில் மின்ஸாரக்கருவிகளைச் செய்வதற்குக்கூடப் பல தேசங்களால் பிறபலமாக உபயோகிக்கப்படுகிற படியால் உற்பத்திக் குறைவினால் உலகத்துக்குக் கஷ்டம் கட்டாயம் ஏற்படும்.

இரண்டு வருஷங்களுக்குமுன் இந்தியாவில் ஏற்றுமதி செய்யப்பட்ட அரக்கின் மதிப்பு 70 இலக்ஷம் பவுன்களாயிருந்தது. அதில், அமெரிகாவிற்கு அநுப்பப்பட்ட அரக்கின் மதிப்பே 45 இலக்ஷம் பவுன்களாக விருந்தது.

மஹாயுத்த காலத்தில், யுத்தசாமான்களைத் தயாரிக்க இப்பொருள் அதிக அளவில் வேண்டியிருந்தபடியால், இதன் அந்நிய நாட்டு வியாபாரமே கவர்மெண்டாரின் அதிகாரத்திற்குள் அமைக்கப்பட்டது.

உலகத்தில் எல்லா தேசங்களுக்குமே அரக்கானது பலவிதத் தொழில்களுக்கு வேண்டியதாக விருப்பதால், அது சம்பந்தமாக நாம் சில விஷயங்களை ஆலோசிக்க வேண்டும். அவைகளாவன:— (1) சுவாபாவிகமாகவே உற்பத்தியாகும் அரக்குக்குப் பதிலாக வேறு செயற்கைப்பொருள் தயாரிக்கப்பட்டு உபயோகிக்கப்படக் கூடுமா? (2) அந்நிய நாடுகளில் ஷெல்லாக்கு அதிகமாக உற்பத்தி செய்யப்படக் கூடுமா? (3) நம்முடைய தேசத்திலேயே மேல்மேலும் அதிக அளவில் அது உற்பத்திச் செய்யப்பட்டு, விலைகள் குறைக்கப்பட்டு, மேற்கூறியவாறு ஏற்படக்கூடிய அந்நிய தேச முயர்ச்சிகள் தடுக்கப்படக் கூடுமா?

சென்ற 20 வருஷங்களில் அரக்கு வியாபாரம் சில சமயம் அதிகமாகிக் கொண்டும் சில சமயம் குறைந்து கொண்டும், ஒரு நிதானமாக வில்லாமலே இருந்து கொண்டிருந்தது. ஆனால், அது மஹாயுத்தமாரம்பித்தது முதல் அதிகரித்துக்கொண்டே வந்திருக்கிறது. நமது தேசமும் அவ்வதிக வியாபாரத்திற்கு ஏற்றபடியே தன்னுடைய உற்பத்தியை அதிகரித்துக் கொண்டு அந்நிய நாடுகளின் தேவைகளைப் பரிபூரணம் செய்து வருகிறது. ஏற்படக்கூடிய உற்பத்தியின் மதிப்பு நிர்ணயிக்கப்படக் கூடாமலிருந்தால், அதினால் உற்பத்தி தேசம்தான் கஷ்டப்படுமேயொழிய அப்பொருளை வாங்கும் நாடுகள் அதிக கஷ்டப்படவே படாது. ஆனால், அரக்கு வியாபாரம் நம்முடைய தேசத்தில் நல்ல நிலையில் அமைக்கப்பட்டிருக்கிறது; ஆகையால் அதற்கு யாதொரு கஷ்டமும் ஏற்படாதுபோல்க் காண்கிறது. 1903-ம் வருஷத்திலிருந்து 1908 வரையில் ஷெல்லாக்கின் விலை ஒரு ஹண்டிரெட் வைட்டுக்கு 200 ஷில்லிங்கு வீதம் இருந்தது; பின்பு, மஹாயுத்தம் தொடங்கும் வரையில்

விலை குறைந்துகொண்டே வந்தது; அதாவது அது 60 ஷில்லிங்கிலிருந்து 100 ஷில்லிங்கு வரையில் இருந்திருக்கிறது. மஹாயுத்தத்திற்குப் பிறகு கவர்மெண்டார் அவ்வியாபாரத்தின்மீது ஏற்படுத்தியிருந்த அதிகாரத்தை (**control**) எடுத்துவிட்டார்கள். பிறகு, விலை 300 ஷில்லிங்குக்கு ஏறியது. 1920-த்தில் 300 ஷில்லிங்குக்கும் ஏறியது. 1920-ம் வருஷத்திற்குப் பிறகு மூன்று வருஷங்கள் வரையிலும் 300 ஷில்லிங்காக விருந்தது. இப்பொழுது ஷெல்லாக்கின் விலை ஒரு ஹண்டிரெட் வைட்டுக்கு 180 ஷில்லிங்காக விருக்கிறது. பண்டைகால வழியில் உற்பத்தி செய்வோர் கூட அவர்களுடைய திறமையற்ற முயர்ச்சிகளையே அதிகரித்து அதிக உற்பத்திகளை உண்டாக்கக் கூடும். குறைந்த விலைகளிலும் விற்கக்கூடும்.

அதிக விலைகள் ஏற்பட்டால் உற்பத்தி செய்வோர் தங்களிடத்திலுள்ள ஒரு வருஷத்திய முழு உற்பத்தியையும் விற்று விடுகிறார்கள், அவர்கள் தங்களுக்கு அடுத்த வருஷத்தில் உற்பத்தி முயர்ச்சிகளுக்கு வேண்டிய சரக்கைக்கூட நிறுத்தி வைத்துக் கொள்கிறதில்லை. அதிக விலைகளால் இலாபம் அடைய முயலுகிற சில்லரை வர்த்தகர்களும் சரக்கில் இதரப்பொருள்களையும் கலந்து விற்கத் தொடங்குகிறார்கள். அதிக விலைகள் அகப்படுவதைப் பார்த்து இரசாயன நிபுணர்கள் செயற்கை அரக்கை இரசாயன மூலமாகத் தயாரித்து விற்கத்தொடங்குகிறார்கள். அக்காரணம் பற்றியே சீயம், இந்தோ சீனா முதலிய, இந்தியாவைப் போன்ற சீதோஷ்ண ஸ்திதியையுள்ள, நாடுகளும் அரக்கை யுற்பத்தி செய்ய ஆரம்பிக்கும்.

ஆகவே, இந்தியா தேசத்தில் மேல் மேலும் அதிகமான அரக்கை உண்டாக்கி, அதைக் கூடியவரையில் குறைந்த விலைக்கு விற்க முயர்ச்சிகள் கைக்கொள்ளப்பட வேண்டும். அரக்குப் பூச்சியைக்கொண்டு திறமான அதிக மாசூல்களை அடைவதற்கு நமது ஜனங்கள் ஞானத்தை யடையவேண்டும். அரக்குப் பூச்சிகளுக்கு பாரஸைட்கள் (**Parasites**, அதாவது, அரக்குப் பூச்சிகளிட மிருந்து ஆஹாரத்தை அடைகிற புழுக்கள்) இருக்கின்றன. அவைகளால் அரக்குப் பூச்சிகளே அழிந்து போகின்றன. மேலும், முன் காலத்தில் அரக்குப் பூச்சிகளால் உற்பத்தி செய்யப்படும் சாயச்சரக்கே முக்கிய வியாபாரப் பொருளாக விருந்தது. அரக்கு இரண்டாவதான பொருளாகத்தான் மதிக்கப்பட்டிருந்தது. அக்காலத்தில் ஷெல்லாக்கில் புதிய பூச்சிகள் ஜெனிக்கும் முன்னமேயே மாசூல்கள் சேகரிக்கப்பட்டன. அவ்வழக்கம் இப்பொழுதும், சாய உற்பத்தி நின்று போனபிறகும், அநுஷ்டிக்கப்பட்டு வருகிறது. புதிய பூச்சிகள் கிளம்புகிற வரையில் கார்க்கலாம் என்கிற ஞானம் உற்பத்தி செய்யும் அவிவேகிகளுக்குத் தோன்றுகிறதில்லை. புதிய பூச்சிகள் கிளம்பினால் அதிக உற்பத்திகள் உண்டாகும் என்கிற ஞானமும் அவர்களுக்குப் படுகிறதில்லை.



அரக்குப் பூச்சிகளை வளர்த்து அரக்கு உற்பத்தியைச் செய்வோர் இந்தியா தேசத்திய, கொறவர் போன்ற, அவிவேக ஜாதியார். அவர்களுக்கு விவேக முறைகளும், ஞானமும் ஏற்படுவது கஷ்டமாயிருக்கிறது. ஆனபோதிலும், அந்நிய நாடுகளுடன் வியாபாரஞ் செய்யும் வியாபாரிகள் அரக்கு உற்பத்திக்கு நேரிடக்கூடிய கஷ்டங்களை உணர்ந்து அதன் சம்பந்தமாக ஞானமும் ஆராய்ச்சிகளும் பரவும் படியாக முயர்ச்சிகளைக் கைக்கொண்டிருக்கிறார்கள். ஐந்து வருஷங்களுக்குமுன் மெஸ்ஸர்ஸ் லிண்டுஸெயும் ஹார்லோவும் ஆராய்ச்சிகளைச் செய்து பார்த்ததில் உற்பத்தி செய்யும் பூச்சிகள் திறமாக விருக்க வேண்டு மென்றும், பூச்சிகளுக்குத் திறமான விருக்ஷ உணவுகள் வேண்டு மென்றும், வியாபாரத்திற்கு வேண்டிய சரக்கை உற்பத்தியிலிருந்து பிறிக்க நவீன வழிகள் கண்டுபிடிக்கப்பட வேண்டு மென்றும், பிறிக்கப்பட்ட பின்பு அரக்கைச் சேர்ந்துள்ள இதர பொருள்களையும் இதர வியாபாரப் பொருள்களாகத் தயார் செய்ய வேண்டியதற்கும் வழிகள் கண்டுபிடிக்கப்பட வேண்டு மென்றும் அறியப்பட்டது.

1921-ம் வருஷத்தில் இந்திய லாக் சங்கமொன்று ஏற்படுத்தப்பட்டது. அச்சங்கத்தின் சிலவுகளின் நிமித்தம், ஏற்றுமதியாகும் அரக்குகளின்பேரில் ஒரு சுவல்ப வரி விதிக்கப்பட்டது. ஒரு திறமான ஆராய்ச்சி ஸ்தாபனமும் ராஞ்சியிக்கு அருகில் அமைக்கப்பட்டது. 110 ஏகரா நிலமும் அதற்காகக் கொடுக்கப்பட்டது. இரஸாயன சாஸ்திரிகளும், ஜீவசாஸ்திர நிபுணர்களும் அதற்கு நியமிக்கப்பட்டார்கள். இத்தொழில் ஓங்க வேண்டியதற்கு பாரெஸ்டு டிபார்டுமெண்டாருடன் ஒத்துழைப்பு அவசியம் வேண்டும். பாரெஸ்டு டிபார்டுமெண்டாரும் இவ்வகையில் நிறம்ப முயர்ச்சி செய்தல் வேண்டும். அப்பொழுதுதான் அரக்கின் உற்பத்தி தளராமல் ஏற்படும்.

அரக்குப்பூச்சி வளர்ப்பும், அரக்கு உற்பத்தியும் நல்ல வருமானத்தை யுண்டுபண்ணக்கூடிய தொழில்கள். நல்ல அரக்குகளுக்கு ஒரு பவுண்டு எடைக்கு 1 ஷில்லிங்கு வீதம் விலை கிடைக்கிறது. இரஸாயன வழியில் செயற்கைச் சரக்கைத்தயார் செய்வோருக்கு இவ்விலைக்குள் சரக்கைத்தயாரிக்க முடியாது. ஆராய்ச்சிகளும் ஞானமும் அதிகரித்தால், குறைந்த சிலவில் அதிக அளவு அரக்கை உற்பத்தி செய்யக்கூடும்.

முற்காலத்தில் ஈஸ்டு இந்தியா கம்பெனியார் ஸோல்ஜர்களின் சிகப்புச் சொக்காய்களுக்காக லாக் சாயத்தை வேண்டினார்கள். அப்பொழுது மெக்ஸிகோவிலிருந்து கொச்சினியல் என்கிற தம்பலப்பூச்சி சாயம் அதோடு போட்டி போட்டது. இரஸாயன நிபுணர்களும் பிறகு செயற்கை சாயத்தை உண்டுபண்ணி மார்க்கெட்டுகளுக்கு அனுப்பினார்கள். அதிலிருந்து அரக்குச் சாயம் வியாபாரத்திலிருந்து நீக்கப்பட்டது. ஆகையால், இப்பொழுது

அரக்குப் பூச்சியின் வளர்ப்பு அரக்கின் நிமித்தமாகவேத்தான் அநுஸரிக்கப்பட்டு வருகிறது.

பாரெஸ்டு பஞ்சாயத்துகள் இத்தொழிலைப் பிறபலமாக அநுஸரிக்கக் கூடும். அரக்குப் பூச்சிகளை வளர்த்து அரக்கை உற்பத்தி செய்தால் அவைகள் நல்ல வரும்படிகளை அடையலாம். நம்முடைய தேசம்தான் அரக்கு உற்பத்திக்குத் தகுந்த தேசம் என்றும், நமது பஞ்சாயத்துக் காடுகளில் அவ்வுற்பத்தி நன்றாய் நடத்தப்படக் கூடுமென்றும் மேற்கூறியவற்றிலிருந்து நன்கு விளங்கும். ஆகையால், பாரெஸ்டு பஞ்சாயத்துகள் அரக்கு உற்பத்தி முயர்ச்சிகளைக் கைக்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்துவோம். கவர்மெண்டாரும், ரெவினியூ போர்டாரும், தொழில் அத்திபக்ஷகரும், பாரெஸ்டு இலாகாவும், இது சம்பந்தமாகப் பாடுபட வேண்டும். ஜீவசாஸ்திர, ரஸாயன சாஸ்திர நிபுணர்களை நியமித்து இத்தொழில் நன்றாய் பஞ்சாயத்துக் காடுகளில் பிறபலமாக நடக்கும்படிச்செய்ய வேண்டுமென்று கோறுவோம். தேசியத்தலைவர்களும் இவ்விஷயத்தில் ஊக்கத்தை நிறம்ப வஹிக்க வேண்டும்.

* * * * *

நம்முடைய தேசத்தில் அரக்கு நிரம்ப உண்டாகும் பொழுது, நாம் ஏன் அவைகளைக் கொண்டு மின்சாரக் கருவிகளையும், கிராமபோன் ரிகார்டுகளையும் நாமே செய்ய ஆரம்பிக்கக்கூடாது? கவர்மெண்டாரும், நமது தலைவர்களும் ஏன் இவ்வழியில் கவனத்தைச் செலுத்தக்கூடாது? ஏன் அவர்கள் நிபுணர்களை நியமித்து தொழில் பள்ளிக் கூடங்களில் இவ்வித வேலைகளில் கல்வி முறையை நடத்தி வைக்கக்கூடாது? நமது ஜனத்தொகையானது பட்டினியாகச் சாகும்பொழுது நாம் ஏன் இவ்வித தொழில்களையுண்டாக்கி நமது ஜனத்தொகைக்கு வரும்படிகளை யுண்டாக்கக் கூடாது? 30, 40 வருஷங்களுக்கு முன்னே வரையிலும் நமது நாட்டில் அரக்கு வளையல்கள் செய்யப்பட்டு உபயோகிக்கப்பட்டனவே. அரக்கைக் கொண்டு தற்கால நாகுக்கில் அற்புதமான வளையல்கள் செய்யப்படலாமே. மேலும், பர்மா, ஜப்பான் முதலிய தேசங்களில்போல் நம்முடைய தேசத்திலும் தட்டுகள், கோப்பைகள், பொம்மைகள் முதலிய வஸ்துக்கள் வெகு நன்றாகச் செய்யப்படலாமே. புதுச்சேரி, காஞ்சீபுரம், கொண்டாபில்லி முதலிய இடங்களில் வெகு நேர்த்தியான பொம்மைகள் செய்யப்படவில்லையா? அவ்வித வேலைகளை வேறு இடங்களிலும் பரவச்செய்யக் கூடாதா? நாம் நமது நாட்டினர்களுக்கு வேண்டிய சாமான்களையெல்லாம் நமது ஜனத்தொகையைக் கொண்டு தயாரிக்கலாமே. அப்படி நாம் செய்தால், நமது தேசத்தில் ஜீவனோபாயமில்லாமைக் கஷ்டமே யொழிந்து போகுமே. நமது நெருப்புக்குச்சித் தொழிலுக்கு அபாயம் வந்திருக்கிறதென்று நாம் ஏற்கனவே சொல்லியிருக்கிறோமே. ஸ்வீடிஷ் மாட்ச்சு கம்பெனியின் முயர்ச்சிகள் பலமாயிருக்கின்



றனவே. அவர்கள் நம்முடைய தேசத்தில் கணக்கில்லாத தொழிற்சாலைகளை ஏற்படுத்த முயலுகிறார்களே. ஜாவா சர்க்கரையை நாம் ஏன் வாங்க வேண்டும்? நம்முடைய தேசத்தில் ஏன் சர்க்கரை உற்பத்தி அதிகரிக்கக்கூடாது? ஜாவாவிலிருந்து வரும் மூட்டைகளின் சங்கியை அதிகரித்து வருகிறதே. நாம் நமது நாட்டிலேயே பலவித வஸ்துக்களைத் தயாரித்துக் கொள்ளலாமே. நம்முடைய பிரமுகர்கள் ஏன் கவனத்தைச் செலுத்தி முயர்ச்சிகளைச் செய்கிறதில்லை. தேசியக் கக்ஷியினர்கள் இவ்வித வழிகளில்தான் நிறம்பப்பாடுபட வேண்டும். மேற்கூறிய தொழில்கள் உண்டாகுமாகில் ஜனத்தொகையின் பெரும்பாகத்திற்கு ஜீவனோபாயமேற்படும்.

# கோழிவளர்ப்பு-பாரெஸ்டுப் பஞ்சாயத்துகளுக்கு ஓர்சிறந்த தொழில்.

நம்முடைய தேசத்தில் 100இல் 95 பேர்கள் மாம்ஸம் சாப்பிடுகிறவர்கள். அவர்களுக்கெல்லாம் கோழியும் கோழி முட்டைகளும் சிறந்த உணவுகளாக விருக்கின்றன. ஆகவே, நமது தேசத்தில் கோழி வளர்ப்புத்தொழில் தக்கபடி அமையவேண்டும்.

கிரேட்பிரிட்டனில் கோழி வளர்ப்புக் கமிஷனரென்கிற உத்தியோகஸ்தர் ஒருவர் வியவஸாய இலாகாவில் நியமிக்கப்பட்டு வேலை செய்கிறார். அவர் சில மாதங்களுக்கு முன் கோழி வளர்ப்பு சம்பந்தமாக ஒரு உபந்நியாஸத்தைச் செய்தார். அதில் அவர் சில ருசிகரமான விவரங்களை எடுத்துக் காட்டினார். 1913-ம் வருஷத்திய பிரிட்டனில் சராசரியில் ஒரு மனிதன் 115 முட்டைகளைப் புசித்தானாம், இந்த 115 முட்டைகளில் 80 முட்டைகள் அந்நிய தேசத்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்டவைகளாம். 1928இல் சங்கியை 132 ஆக பெறுகிற்றும். அதன் இறக்குமதி பாகம் 75 ஆக இருந்ததாம். பிறகு, பிரிட்டனின் உற்பத்தி 100க்கு 100 ஆகவே அதிகமாய்விட்டதாம். இத்தொழிலிலிருந்து பிரிட்டன் தேசத்தார் பிரதி வருஷமும் அடைந்த வரும்படி 70 இலக்ஷம் பவுன்களாம். பிறகு, 1929-ம் வருஷத்தில் பிரிட்டனின் கோழி சங்கியை 100க்கு 20 ஆக அதிகமாயிருந்ததாம், 240 இலக்ஷம் பவுன் பெறுமான கோழிகளும் முட்டைகளுமிருந்தனவாம். மேற்ச்சொல்லிய தொகை பிரிட்டனின் தானியமாகூலின் மொத்தக் கிறயத்திற்கு ஏறக்குறைய சமமாகவும், அத்தேசத்தில் காய்கரி, பழம் முதலியவைகளின் உற்பத்தியின் கிறயத்திற்கு அதிகமாகவும் இருந்ததாம். பிரிட்டனில் புசிக்கப்பட்ட கோழிகள், முட்டைகள் இவைகளின் கிறயம் வருஷம் ஒன்றுக்கு 450 இலக்ஷப் பவுன்களாயிருக்கிறது.

நமது தேசத்தில் சாக வஸ்துக்களையேப் பின்பற்றுபவர்கள் 100 இல் 5 பெயர்கள் தான். மற்றவர்களுக்கு மாம்ஸம், மீன் முட்டை முதலியவைகள் கட்டாயமாக வேண்டும். ஆகவே, கோழி வளர்ப்புத் தொழில் நமது கிராமங்களில் பிறபலமாக அநுஸரிக்கப்படவேண்டும். பாரெஸ்டு பஞ்சாயத்துகள் தான் இத்தொழிலை நன்றாக அநுஸரிக்கக்கூடும். கவர்மெண்டாரும் பிரமுகர்களும் இவ்வகையில் கவனத்தைச் செலுத்தி இத்தொழிலை நிறம்ப பரவச் செய்யவேண்டும். இது கிராம ஜனங்களுக்கு நல்ல ஜீவனமாகும். பாரெஸ்டுப்பஞ்சாயத்துகள் இதை அநுஸரித்தால் அவைகள் நல்ல வரும்படிகளை அடையக்கூடும். தற்போதில் நமது தேசத்தில் கோழிகளின் சங்கியை குறைந்து வருகிறது. முட்டைகளும் பல விடங்களில் அகப்படுகிறதில்லை. கோழிகளுக்கும், மனிதர்களுக்குப் போலவே நோய்கள் வருகின்றன. அந்நோய்களின் நிமித்தம் வைத்தியசாலைகள் ஏற்படவேண்டும். கோழி வளர்ப்பு சம்பந்தமாக கவர்மெண்டார் ஒரு நிபுணரை நியமிக்க வேண்டும். கோயம்புத்தூரில் ஒய். எம். சி. யே. ஸ்தாபனத்தார் கோழி வளர்ப்பு சம்பந்தமான பல முயர்ச்சிகளை நிரூபணங்களுடன் கிராம ஜனங்களுக்குக் கற்பிக்கிறார்கள். அஸ்தாபனத்தில் வெகு திறமான கோழி வைத்தியசாலை யொன்று நடைபெறுகிறது. 40, 50 கோழி நோயாளிகள் தினந்தோறும் சிகித்ஸையை அடைகின்றன.

# இங்கிலாந்தில் ஸ்திரீகளின் கிராமாபிவிருத்தி இயக்கம்.

மஹாயுத்தத்திற்கு முந்திய காலத்தில் இங்கிலாந்திலும், கிராம ஜனங்கள் கல்வியற்றவர்களாகவும், அபிவிருத்தி முயர்ச்சிகளைக் கைக்கொள்ளாமலும், க்ஷேமக் குறைவிலும், செல்வக் குறைவிலு மிருந்திருக்கிறார்கள். யுத்த மேற்பட்ட பிறகு, இங்கிலாந்தில் ஜனங்கள் அதன் உணவு உற்பத்தியானது அதன் ஜனத்தொகைக்குப் போதாமலிருப்பதைக் கண்டறிந்தார்கள். யுத்த மேற்பட்டபொழுது புருஷர்களுள் பெரும்பாலர் பட்டாளங்களில் சேர்ந்து யுத்த இடங்களிற்குப் போய்விட்டபடியால், இங்கிலாந்தின் ஸ்திரீகள், தேசத்தில் உணவும், ஜீவனமும், செல்வமும் எப்பொழுதும் நிறம்ப இருக்க வேண்டிய நிமித்தம், ஆலோசனைகளை யடைந்து, முயர்ச்சிகளைக் கைக்கொள்ளத் தொடங்கினார்கள். யுத்தத்தின் இரண்டாம் வருஷத்தில் ஸ்திரீகளின் இயக்கம் தோன்றியது. முதல் முதலில் பட்டணங்களின் ஸ்திரீகள் இம்முயர்ச்சிகளைக் கைக்கொண்டார்கள். அவர்கள் கிராமாந்திரங்களில்ப் போய் உழைப்பதற்காக பல கூட்டங்களாக அமைக்கப்பட்டார்கள். 1915-ம் வருஷத்தில் மிஸ்ஸஸ் வாட்சு என்னும் ஒரு கனடா தேசத்து மாது இங்கிலாந்தில் ஸ்திரீகளின் கூட்டு ஸ்தாபனங்களை ஏற்படுத்தினார். அவ்வம்மையார் இங்கிலாந்தின் வியவஸாய அபிவிருத்தி சங்கத்தின் ஒத்தாசையை யடைந்து, ஆங்கில்சீயிலுள்ள லான்பேர் என்கிற ஊரில் முதல் முதலான ஸ்திரீக் கூட்டு ஸ்தாபனத்தை ஏற்படுத்தினார்.



இன்றய தினத்தில் இங்கிலாந்திலும் வேல்சிலுமாக 4709 ஸ்திரீ ஸ்தாபனங்களிருக்கின்றன. 1917-ம் வருஷம் வரையில் ஸ்திரீ ஸ்தாபன நிர்மாண அபிவிருத்தி வேலையானது வியவஸாய அபிவிருத்திச் சங்கத்தாரால் நடத்தப்பட்டது. பின்பு இங்கிலாந்தின் அபிவிருத்தி கமிஷனர் வியவஸாய அபிவிருத்திச் சங்கமானது அதற்குக் கிடைக்கும் ஸர்க்கார் கிராண்டிலிருந்து ஸ்திரீ ஸ்தாபன வேலைகளை நடத்தக் கூடாதென்று உத்திரவிட்டார்கள். ஆனபோதிலும் கடைசியில் இங்கிலாந்தின் வியவஸாய இலாகா அஸ்தாபனங்களின் சம்பந்தமாக நிர்மாண, அபிவிருத்தி வேலைகளை மாத்திரம் செய்ய ஒப்புக்கொண்டது. ஸ்திரீ ஸ்தாபனங்கள் சபைகூடி வியவஸாய இலாகாவின் ஒத்தாசை நிமித்தமாக ஆலோசனைச்செய்து அவ்வொத்தாசையை ஒப்புக்கொண்டன. ஆனால், ஒப்புக்கொள்ளுகையில் ஸ்திரீ இயக்கமும், ஸ்தாபனங்களும் கவர்மெண்டாரின் அதிகாரத்திற்குள்ளே யிருக்கக்கூடாதென்றும், அவைகள் சுய அதிகாரத்துடன் முயர்ச்சிகளைச் செய்யவேண்டுமென்றும் அவைகள் தீர்மானித்துக்கொண்டன. ஸ்திரீ ஸ்தாபனங்களெல்லாம் ஒரு தேசீய ஐக்கியமாக அமைந்தன. மேற்கூறிய தேசீய ஐக்கியந்தான், ஸ்தாபனங்களின் நோக்கம் பயன்படுவதற்கும், அவைகளின் பாதுகாப்புக்கும் பொறுப்பை வஹிக்க வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. பிறகு கொஞ்சகாலத்திற்குள் மேற்கூறிய ஸ்தாபனங்கள் கிராம ஸ்திரீகள் அனைவர்களின் பிரதிநிதி ஸ்தாபனங்களாகக்கருதப்பட்டு, ஐக்கியத்துக்கு ஒரு நிர்வாஹ சபை ஏற்படுத்தப்பட்டது. லேடிடென்மான் (**Lady Denman**) அதற்குத் தலைமை வஹித்தார்.

ஐக்கியத்தின் காரியாலயம் வியவஸாய அபிவிருத்திசபையின் ஸ்தலத்திலிருந்து கவர்மெண்டின் வியவஸாய இலாகாவின் ஸ்தலத்திற்கு மாற்றப்பட்டது. இப்படி அது இரண்டு வருஷங்கள் வரையில் கவர்மெண்டு கச்சேரியிலேயே இருந்து வந்தது. கவர்மெண்டின் ஆதரவும், பண உதவியும் அதற்கு பெரிய பலமாகவே வாய்ந்தன. சீக்கிறத்தில் 1255 ஸ்தாபனங்கள் ஏற்பட்டுவிட்டன. ஸ்தாபனங்கள் நிர்வாஹ வழியில் சுய அதிகாரங்களை வஹித்தன. அவைகள் ஜனநாயக வழிகளையே அநுஸரித்தன. ஒவ்வொரு மெம்பரும் 2 ஷில்லிங்கைக் கட்டணமாகக் கொடுத்து வந்தார்கள்.

ஸ்திரீகளியக்கத்தின் நோக்கமானது கிராமாபிவிருத்தியும் தேசத்திலுள்ள ஸ்திரீகள் எல்லோரும் அவர் அவர்களின் குடம்பங்களைச் சரியாகவும், சிக்கனமாகவும், க்ஷேம செல்வங்களுடனும் விவேக வழியிலும் நடத்தவேண்டுமென்பதோடு, அவர்கள் தோட்டப்பயிரையும் கோழி வளர்ப்பு, ஆடுமாடு வளர்ப்பு பால் நெய் வெண்ணை உற்பத்தி முதலிய முயர்ச்சிகளை யநுஸரித்து மாசூல்

களையும் இதர உற்பத்திகளையும் விற்பனைசெய்து வரும்படிகளை அடையவேண்டுமென்பதும் ஸ்திரீ ஸ்தாபனங்களில் அவ்வண்ணமே போதனைகள் நடத்தப்படுகின்றன. மேற்கூறிய நோக்கம் நன்றாய் பயன்பட்டுவிட்டது. ஸ்திரீகள் மேற்கூறிய முயர்ச்சிகளை நன்றாய் அநுஷ்டித்து வருகிறார்கள். கிராம ஜனங்கள் செல்வத்தை அடைந்து சுகமாக வாழ்கிறார்கள். ஸ்திரீ ஸ்தாபனங்களில் உணவுகளை வெகு நாள் வரையிலும் கெடாதபடி வைத்துக்கொள்ளவேண்டிய வகையிலும் சமையல் செய்வதில் நவீன முறைகளிலும் போதனைகள் நடத்தப்படுகின்றன. கல்வியும் சங்கீதமும் கூட கற்பிக்கப்படுகின்றன. இன்னும், சித்திரமெழுதுவதுகூட கற்பிக்கப்படுகிறது. ஸ்திரீகளியக்கத்தினால்தான் கார்னெகி புத்தகவாசகசாலைகள் கிராமங்களில் ஏற்படுத்தப்பட்டன. கிராம ஸ்திரீகள் அவைகளை நன்றாய் உபயோகிக்கிறார்கள். கிராமங்களில் இவ்வியக்கமும் ஸ்தாபனங்களும் முயர்ச்சி செய்வதில் கிராம ஸ்திரீகள் ஸமூஹ உணர்ச்சியையும் பரோபகார நினைவையும் நிறம்பப்பாராட்டுகிறார்கள். கிராம ஸ்திரீகள் கூட்டு முயர்ச்சியின் நன்மைகளை யுணர்கிறார்கள். இன்னும் அவர்கள் தியாக குணம், தன்னடக்கம் முதலிய உயர்வு குணங்களையும் பாராட்டி ஸ்தாபன முயர்ச்சிகளில் எல்லோரும் ஒத்துழைப்பு மனப்பாங்கையும் வஹிக்கிறார்கள். நம்முடைய கிராமங்களிலும் இவ்வித ஸ்தாபனங்கள் ஏன் ஏற்படக்கூடாது? இங்கிலாந்தில் போலவே நமது தேசத்து ஸ்திரீப்பிரமுகர்களும் பாடுபட்டு இவ்வித ஸ்தாபனங்களை ஏற்படுத்துவார்களா? டாக்டர் முத்து லக்ஷ்மி அவர்கள் போன்றவும், ஸ்ரீமதி மிஸ்ஸஸ் ருக்மணி இலக்ஷ்மீபதி அவர்கள் போன்றவும் உள்ள தேசாபிமானிகள் முயர்ச்சிகளைக் கைக்கொண்டால் நல்லது.

---

எங்கள் பேர்பெற்ற **மீனம்பாளயம் பாலக்காடு** புகையிலையே எக்காலத்திலும் வாங்குங்கள்.

சில்லரையாகவும் மொத்தமாகவும் வியாபாரிகளுக்கும் எந்த சமயத்திலும் சப்ளை செய்ய தயாராயிருக்கிறோம்.

புகையிலையின் திடம், மணம், காட்டு, குணம் மற்றுமுள்ள விசேஷங்கள் யாவும் ஒரேமுறை பார்த்தாலே நன்றாய் விளங்கும்.

இந்தியா முழுவதும் வியாபாரிகள் தேவை.

விபரத்துக்கு எழுதவும்.

**S. Y. ஸ்வாமி அய்யர்**

321 தம்புசெட்டி தெரு, T. மதராஸ்

199406

# SADHANA
# AUSADHALAYA
## DACCA (Bengal)

—ADHYAKHA—

**Joges Chandra Ghose,** M. A. F. C. S. (London)

***Formerly Professor of Chemistry, Bhagalpur College.***

மிகவும் சுத்தமான ஆயுர்வேத ஔஷதங்கள் கிடைக்கும். வேண்டுவோருக்கு விலைப்பட்டி இனாமாக அனுப்பப்படும். வியாதியின் விவரத்தைத் தெரிவித்தால் இனாமாக மருந்து பட்டி அனுப்பப்படும்.

மகரத்வஜம். (சுவர்ணஸிந்தூரம்).

அசல் தங்கத்துடன் ஒரு சேர் ... ரூ 4 0 0.

இது எல்லா வியாதிகளுக்கும் கைகண்ட மருந்து. பித்தம் வாதம் முதலிய வியாதிகளைப் போக்குவதுடன் ரத்த சுத்திக்கும் ஏற்றது.

சரிபாடி ஸரஸா.

இது மூல ரோக ஸம்பந்தமான வியாதிகளுக்கெல்லாம் ஸரியான மருந்து.

விலை ஒரு சேர் ரூ. 3 0 0

சுக்ல ஸஞ்சீவி.

இது வீர்யக் குறைவு, அபோகத் தன்மை, சுவப்னஸ்கலிதம் முதலிய வியாதிகளுக்கு அமிர்தம் போன்ற மருந்து.

விலை சேர் 1க்கு ரூ. 16 0 0

அபல பந்தப ஜகா.

இது ஸ்திரீகளுக்கு உண்டாகும் இடுப்பு நோய், முதுகு வலி, கர்ப்பப்பை வியாதி, அகால மாதவிடாய் முதலிய கொடும் வியாதிகளைப் போக்கும்.

16 டோஸ் ரூ 2. 50 டோஸ் ரூ 5

Regd. No. M. 2475. AUG.-SEP. 1931. Vol VI—No. 8-9


# அம்ருதாஞ்சனம்.

என்று லென்ன ?

தலை நோய், பக்க நோய், கீல் நோய்,

மென்னை நோய், கழுத்து நோய், ஒற்றைத்தலை நோய்,

வாய்வு நோய், முதுகு நோய், பல் நோய், மூலச்சங்கை,

சுளுக்கு, காணர், தேள், பூரான்,

பக்ஷவாதம் — சைத்யம்




சுளுப்பு — மார்ச்சளி

உப்பிசம் — மார் மூச்சு

கழுத்து வலி — ரத்தம் விழுதல்

சந்துவாய்வு — சீழ் விழுதல்

சுண்டு, பேன், முகப்பருவு, வீக்கம்

நோய், செகப்பு, தத்துக்கள், படை

சிறங்கு, தெனவு, எரிச்சல், இது

அது என்று சொல்வதேன்?

எல்லா நோய்களையும்

பாதைகளையும்

போக்கும்! போக்கும்!! போக்கும்!!!

மூன்று விசைகளில் போக்கும்

## அமிர்தாஞ்சனம் டிபோ

பம்பாய் & மதராஸ்


Published by Mr. A. Rajagopal Reddi, President, Forest Panchayatdars' Union Ltd., Madras. Printed AT THE MAGAZINE PRESS LIMITED, CHINGLEPUT.